## ★ ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சருடன் 'தமிழ் சங்க சம்மேளனம்' நேரடிப் பேச்சு

(கன்பரா)
யுத்தத்தை கைவிட்டு இனப் பிரச்னைக்கு இலங்கை அரசு உடனடியாக அரசியல் தீர்வு காணவேண்டுமென ஆஸ்திரேலியா வெளியுறவு அமைச்சர் செனட்டர் கிறீற்ஈவான் தெரி (4ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 04 இதழ் 222
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 20 — 09 — 1992


## யாழ். குடாவில் தாக்குதல் தொடரும்

(கொழும்பு)
வடபகுதியில் இராணுவ பிரதேசம் விஸ்தரிக்கப்படும் வரை தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறும் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
(4ம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவுதினம் 5வது நாள் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
தியாகி திலீபனின் 5ம் அண்டு நினைவு தினம் நேற்று 5-வது நாளாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மிகவும் உணர் (4ம் பக்கம் பார்க்க)

## ★ யுத்தநிறுத்தம் ★ மேற்கு நாட்டில் நேரடிபேச்சு

# அரசு - புலிகள் பேச்சுகளுக்கு

# மேற்கு நாடுகள் புதிய திட்டம்

## இரு தரப்பிற்கும் அழைப்பு

(லண்டன்)
இலங்கை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக மேற்கு நாடுகள் சில புதிய சமாதான திட்டமொன்றை முன்வைத்துள்ளதாகவும் இதுகுறித்து இலங்கை அரசும் - விடுதலைப்புலிகளும் மேற்கு நாடொன்றில் நேரடிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க இத்திட்டம் வழிவகுப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:

இலங்கையில் தொடரும் போரை நிறுத்த புதிய சமாதான திட்டமொன்று அமெரிக்கா, சுவிஸ்லாந்து, கனடா, சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளின் ஒருமித்த ஆதரவுடன் தயாரிக்கப்பட்டுள்ளது

இந்தசமாதானத் திட்டத்தின்படி—

★ அரசபடைகளும் புலிகளும் உடனடியாக யுத்த நிறுத்தம் செய்தல்.

★ குறிப்பிடப்படும் மேற்குநாடு ஒன்றில் சமாதான பேச்சுவார்த்தையினை நடாத்துதல் என்பனவாகும்.

மேலும் இப் பேச்சுக்களில் நேரடியாகக் கலந்துகொள்ளு
(4-ம் பக்கம் பார்க்க)

### காமினி கோரிக்கை

## சிறிமா நிராகரிப்பு

(கொழும்பு)
சிறிலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் உட்பட எதிர்க்கட்சியினர் யாவரும் பாராளுமன்றத்திலிருந்து ராஜினாமா செய்யவேண்டுமென்ற கோரிக்கையை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நிராகரித்துள்ளார்.

இந்தக்கோரிக்கையை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான காமினி திசநாயக்காவி
(4ம் பக்கம் பார்க்க)

## 'பாட்டாளிகட்சி'-புலிகள் உறவு அறிக்கைசமர்ப்பிக்க உத்தரவு

(சென்னை)
இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுடன், பாட்டாளி மக்கள் கட்சிக்குள்ள ஈடுபாடு குறித்து தமிழக அரசிடமிருந்து முழு அறிக்கையை மத்திய அரசு கோரவுள்ளதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும்
(4ம் பக்கம் பார்க்க)

## 'பிரபா' விவகாரம் இந்தியா பரிசிலனை

(சென்னை)
ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசை கோரும் விவகாரம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சு பரிசீலித்துவருகிறது.

இத்தகவலை இந்திய உள்துறை இணை அமைச்சர் திரு. எம். எம். ஜேக்கப் சென்னையில் தெரிவித்தார்.

ராஜீவ் கொலைவழக்கு விசாரணை இம்மாதம் 23-ந் திகதி ஆரம்பமாகவுள்ளதும் தெரிந்ததே. (சி)

## 10 ஜே.வி.பி. முக்கியஸ்தர்கள் சிறையிலிருந்து தப்பி ஓட்டம்

(கொழும்பு)
களுத்துறை மாவட்டத்தில் பெல்வத்தை தடுப்பு முகாமிலிருந்து ஜே வி பி. முக்கிய உறுப்பினர்கள் பத்துப்பேர் நேற்று முன்தினமிரவு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த முகாமிலுள்ள தரையின் கீழ் சுரங்கப்பாதையை அமைத்தே மேற்படி பத்துப் பேரும் நள்ளிரவில் தப்பிச் சென்றுள்ளனர்.

நேற்றுக்காலை கைதிகளின் எண்ணிக்கை கணக்கெடுக்கப்பட்டபோதே இது கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாக இப்பகுதிகளில் சோதனையிட்ட போது சுரங்கப்பாதை கண்டு
(4ம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)
யாழ்ப்பாண மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 7-30 மணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இதேவேளை இந்த ஊரடங்கு உத்தரவு 14 மணி நேரம் தளர்த்தப்படுவதாக மற்றொரு இராணுவ அதிகாரி தெரிவித்தார். (சு-சி)

### ★ தமிழகத்திற்கு மேலதிக

## பொலிஸ் படையணி விரைவு 6000 தொண்டர்கள் கைது

(சென்னை)
பாட்டாளி மக்கள் கட்சியினா் கைது செய்யப்பட்டதனையடுத்து தமிழ் நாட்டில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக கைதுசெய்யப்பட்டோரின் தொகை 6 ஆயிரத்தையும் தாண்டிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாத்திரம் 4,000 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

இதேவேளை தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க மத்தியறிசேவ் பொலிஸ்படையைச் சேர்ந்த 3 அணிகள் நேற்று சென்னை வந்துள்ளதாகவும் ஒருஅணி சென்னையிலும் ஏனையவை மற்றைய மாவட்டங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்தது.
(4ம் பக்கம் பார்க்க)

## விசாரணை முடிவு

(கொழும்பு)
மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும் மற்றும் உயர் அதிகாரிகளும் அராலித்துறையில் இடம்பெற்ற கண்ணிவெடியினால் மரணமான சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட 'இஸ்மாயில் கமிசன்' சாட்சிகள் அனைவரையும் விசாரித்து முடித்துள்ளது. (சு)

குளம் அமைத்து வளம் பெருக்குவோம்

## வரி விளம்பரம்

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6690)

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்கு மாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ் ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6799)

### அனுமதி மாதிரிப்பரீட்சை (ஆண்டு-6)

ஆண்டு 5-ல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதி மாதிரிப் பரீட்சை (தமிழ் ஆங்கிலம் கணிதம்) 20-09-92 ஞாயிறு (இன்று) மு. ப 8-00, மு. ப 11-00 நடைபெறும். எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காதமாணவர்கள் தோற்றலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-6820]

### ஜோதிட விஞ்ஞானம்

எண்ஜோதிடம், ரேகை சாஸ்திரம், ஜாதகக் கணிப்புகளுக்கும் தினமும் காலை 9 மணிக்குமுன் நேரிலே சந்திக்கலாம் Prof. சத்தியதாஸன் Mech. E, Elec E) பத்து வீட்டுத் திட்டம், சட்டுடை. 'வியாழமாற்றம்'' கிடைக்குமிடம் பாலாஜி புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி. 6822)

### புதிய வெளியீடு

உங்கள் குழந்தைகள் படித்து மகிழ இனிய பாடல்கள் படங்களுடன் வெளிவந்துள்ளது: ''ரோஜாப் பூ'' பூந்தோட்டம், நொடியும் விடையும், பொறுக்கிய முத்துகள் ஆகிய நூல்களும் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும், ஆசிரியர் ''கோப்பாய் சிவம்''. (எ- 2452)

# வவுனியாவில் ஆங்கிலமொழி அபிவிருத்திப் பாடநெறி

(வவுனியா)

மாவட்ட ஆங்கில மொழி அபிவிருத்தி பாடநெறி வட மாகாண மாணவர்களுக்காக வவுனியாவில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து 1991-ம் ஆண்டு நடத்தப்பட்ட ஆங்கில உதவி ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றி 80 தொடக்கம் 105 வரையிலான மதிப்பு எண்களைப் பெற்ற 23 மாணவர்கள் இந்தப் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

# தபால் நிலையங்களில் தேங்கியுள்ள கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் தபால்பகுதியினரால் விநியோகிக்கப்பட்டு வரும் தபால்களில் வலிவடக்கு வலி மேற்குப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கான உள்நாட்டு வெளிநாட்டுத் தபால்கள் தபாற்கந்தோரில் தேங்கிக் கிடக்கின்றன.

அண்மையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களிலும், பிற இடங்களிலும்செயற்பட்டுவரும் தபாற் கந்தோர்களில் தேங்கிக்கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தபால்களை வலிமேற்குப் பகுதி வலி வடக்குப்பகுதி மக்கள் வேறு பகுதிகளில் செயற்பட்டுவரும் அத்தபாலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பிரதம தபாலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. [56]

# கிராம அ. சங்கங்களை புனரமைக்க நடவடிக்கை

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராம அபிவிருத்தி சங்கங்களையும் புதிய யாப்பு விதிகளுக்கமைய புனரமைப்பு செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கிராம அபிவிருத்திப்பணிப்பாளர் சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்று நிருபம் அனுப்பிவைத்துள்ளார்.

13 பேரைக் கொண்ட செயற்குழுவில் அவ்அப்பிரிவு கிராம உத்தியோகத்தர்கள் பதவி வழியாக செயற்குழு உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் தனிப்பட்ட நபர் ஒருவரின் பெயரை கிராம முன்னேற்றச் சங்கத்துக்கு பெயராக சூட்டக்கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் பல கிராம முன்னேற்றச்சங்கங்கள் உருவாக்கலாம் என்று ஒரு சங்கத்தின் அங்கத்தவர் இன்னொரு சங்கத்தில் அங்கத்தவராக இருக்கக் கூடாது என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

அங்கத்தவராகச் சேர விரும்புவோர் வருடாந்த சந்தாவாகரூபா 12/- செலுத்த வேண்டும். (137)

# சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கந்தசாமி ஆலய மகா உற்சவத்தை முன்னிட்டு இருபாலை தமிழ் மா மன்றம் நடாத்திய சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்: தங்கப்பதக்கம் அஜிதா ஸ்ரீபவான் கல்வியங்காடு. வெள்ளிப்பதக்கம் து. மோகானம்பாள் (நாவற்குழி) வெண்கலப்பதக்கம் தாட்சாயினி பாலச்சந்திரன் (நல்லூர்) ஆறுதல் பரிசு பெறுவோர் சௌரீ சுந்தரம் (கொக்குவில்) கவிதா ஞானபாஸ்கரன் (கல்வியங்காடு) மற்றும் 25 பேர் சான்றிதழ் பரிசு பெறுகின்றனர். (ரி)

# மாணவர் உணவு முத்திரைக்கு குரக்கன் மா, நாட்டரிசி வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைகளுக்கு மே யூன், யூலை மாதங்களுக்கு குரக்கன் மாவும் நாட்டரிசியும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. உள்ளூர் உற்பத்திப் பொருட்களைப் பெருக்கி ஊக்கமளிப்பதே இதன் நோக்கமாகும் என்று தெரிகிறது.

இந்த நடவடிக்கை முதலில் யாழ்ப்பாணம் நல்லூர் ஆகிய ப. நோ. கூ. சங்கங்களிலேயே மேற்கொள்ளப்படவிருப்படவிருக்கிறது ஊக்கள் கூடுதலான அளவு கிடைக்கப்பெற்றால் ஏனைய ப. நோ. கூ. சங்கங்களுக்கும் வழங்கப் பட்டு, இத்திட்டம் விரிவு படுத்தப்படும்.

ஒரு மாணவ மதிய உணவு முத்திரைக்கு ஒருகிலோ குரக்கன மாவும், முத்திரையின் மீதிப்பெறுமதிக்கு நாட்டரிசியும் வழங்கப்படும். ஒருகிலோ குரக்கன் மா ரூபா 35/-க்கும் நாட்டரிசி கிலோ 24/-க்கும் ப. நோ. கூ சங்கங்கள் விற்பனை செய்யும்.

இந்த நடவடிக்கைகளுக்காகக் கொள்வனவு செய்யப்படவுள்ள குரக்கன் மா, நாட்டரிசி ஆகியவற்றின் பெறுமதியில் 50 வீதமான பெறுமதி, ப நோ. கூ. சங்கங்களுக்கு முற்பணமாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (161)

# உணவு தயாரிக்க அகதிகளுக்கு விறகு

(புலோலி)

வலிகாமம் வடக்கு, மேற்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கைகாரணமாக இடம்பெயர்ந்தோருக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் உணவு தயாரிக்க தேவையான விறகுகளை வழங்கிவருகின்றது.

மேற்கண்ட பகுதிகளிருந்து இடம் பெயர்ந்தோர்களின் சில முகாம்களுக்கு அரசுஅரிசி, மா, சீனி, பருப்பு வகைகளை வழங்கிவருகிறது. இவற்றை இடம் பெயர்ந்தோர் உணவாகச் சமைப்பதற்குத்தேவையான விறகுகளையும் அரசசார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களின் இணையம் வழங்கி வருகிறது. (61-இ)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 23-ம் திகதி நடைபெற இருந்த கல்லூரிகளுக்கான விஞ்ஞான - வினாவிடைப் போட்டி விஞ்ஞானப் பேச்சுப்போட்டி ஆகியன ஜனவரி 12ம்திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

## மாதாந்த உதவிப்பணம

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வறியவர்களுக்கு பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப் படுகின்றது. (137)

### சாவகச்சேரி நகரசபை

## பொது அறிவித்தல்

1992-ம் ஆண்டுக்குரிய துவிச்சக்கரவண்டி உரிமம் பெறாதவர்கள் 30-09-92க்கு முன் அவற்றைப் பெற்றுக் கொள்ளுவதன் மூலம் எம்முடன் ஒத்துழைத்து அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

த. நவரத்தினராசா
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
18-09-92. (ஏ-2455)

## இராசி பலன்

20-09-1992

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 04)

அட்டமி மு. ப 8-43 வரை, திருவாதிரை பி. இ 3-31 வரை சித்தயோகம் இராகு காலம் மாலை 4-32 முதல் 6-02 வரை சுபநேரம் காலை 9-02 முதல் 10 - 32 வரை

மேஷம்: பலருடைய ஆதரவு, திடீர்நன்மை, பாராட்டு.

இடபம்: நண்பர்களிடம் மனக்கசப்பு, பணச்செலவு, குடும்பபிரிவு.

மிதுனம்: புதியமாற்றம் மனமகிழ்ச்சி, காரியசித்தி.

கடகம்: காலதாமதம், அகாலபோஜனம், துயரம்.

சிங்கம்: காரிய அனுகூலம், வெளித்தொடர்பு, வெற்றி.

கன்னி: உறவினர் ஆதரவு, கடன் வசூல், உடலில் தொல்லை,

துலாம்: கடும்பகை, வேலைப் பளு, தொழில் நஷ்டம்.

விருச்சிகம்: அதிகாரிகள் பயம் அவமதிப்பு, அலைச்சல்.

தனுசு: பிடிவாதம், பெண் உதவி, விருந்து வைபவம்.

மகரம்: எதிர்ப்புகளைச் சமாளித்தல், நண்பர்உதவி. தியாகம்.

கும்பம்: அன்னியர் தொல்லை, பணமுடை, ஏமாற்றம்

மீனம்: வாழ்க்கைக் குழப்பம், பயனற்றசெயல், வேதனை.

— ஜோஸ்யர்

## இன்று

(உடுப்பிட்டி)

மேலைப் புலோலி ஆத்தியடிப் பிள்ளையார் ஆலய அஷ்டோத்தரசத சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை 9-00 மணிக்கு நடைபெறும். (150)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணிக்கு சந்தானகுரவர் அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகளின் பிரார்த்தனை நினைவுப்பேருரை நடைபெறவுள்ளது சைவப் புலவர் மு. திருஞான சம்பந்தபிள்ளை நினைவுப்பேருரை நிகழ்த்துவார்.

## இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதே அரசின் நோக்கம்

(கொழும்பு)

இனப் பிரச்னைக்குத் துரித தீர்வு காண்பதே அரசின் நோக்கம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் திரு ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நாடாளுமன்றத் தெரிவுக் குழு கிரமமாகக் கூடி, தீர்வுக்கான யோசனைகளை ஆராய்ந்து வருகிறதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி)

பட்டப்பின் கல்வி டிப்புளோமா கற்கை நெறி

## 1991/92- நேர்முகப் பரீட்சை

பட்டப்பின் கல்வி டிப்புளோமாப் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்குரிய நேர்முகப் பரீட்சை ஒக்டோபர் 10ஆம், 11-ஆம்திகதிகளில் நடைபெறும்.

இந்நேர்முகப் பரீட்சை தொடர்பான கடிதங்கள் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. இவர்களின் பெயர்ப்பட்டியலொன்று பல்கலைக்கழக அறிவித்தற் பலகையிலும் இடப்பட்டுள்ளது.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
18-09-92 (எ-2454)

### சாவகச்சேரி நகராட்சிமன்றம்

## முக்கிய அறிவித்தல்

### கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழித்தல்

சாவகச்சேரி நகரசபையின் நிர்வாகப் பிரதேச எல்லைக்குள் உள்ளவர்கள் தங்கள் நாய்களைக் கட்டி வளர்க்கவேண்டுமென்பதையும், கட்டாக்காலியாக வீதிகளில், ஒழுங்கைகளில், பொதுஇடங்களில் திரியும் நாய்கள், இதற்கென இச்சபையால் நியமிக்கப்பட்ட ஊழியர்களால் பிடிக்கப்பட்டு அழிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
18-09-92. (ஏ-2456)

# தியாகி திலீபன் நினைவாக பல்வேறு நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் நேற்று முன்தினம் தியாகி திலீபனின் ஐந்தாவது அண்டு நினைவு அஞ்சலி நிகழ்ச்சிகள் வைபவ ரீதியாக காலை தொடக்கம் மாலைவரை இடம்பெற்றன.

பாடசாலை மாணவர்கள்—சிறுவர்கள் பெண்கள்—வயோதிபர் வரையில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டதை காணக்கூடியதாக இருந்தது.

வடமராட்சி வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் தியாகி திலீபனின் நினைவாக நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தன.

பருத்தித்துறை தும்பளை தெற்கு வீதியில் பருத்தித்துறை வட்டஅவைப் பிரிவினரும் திருவள்ளுவர் வாசிகசாலையினரும் மக்களும் ஒன்று சேர்ந்து வீதி துப்பரவாக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

கரவெட்டி வட்டவைப் பிரிவில் துன்னாலை மக்களால் மாவீரர் பீடமும் சிறிய வீதிகளும் திருத்தி அமைக்கப்பட்டன

பளை கிராம வட்டவைப் பிரிவினரால் அரசன் நகர் வீதிகள் திருத்தப்படும் பணி ஆரம்பமாகியது.

கொடிகாமம் வரணி அரசினர் வைத்தியசாலையும் துப்புரவு செய்யப்பட்டது.

தீவக மாணவர் அமைப்பு புகையிரதநிலைய முகாம் சுற்றாடல் பகுதியைப் பெருமளவு மக்களுடன் ஒன்று சேர்ந்து பிற்பகல் 4-00 மணியளவில் துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டனர்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில், நாவாந்துறை சந்தைப்பகுதி, வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடி ஆகியவற்றில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் தியாகி திலீபனின் 5வது ஆண்டு உண்ணாவிரத நிகழ்ச்சியில் பெருமளவு மக்கள் கலந்துகொண்டனர். (56)

# இன்று இடம்பெறும் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

லெப். கேர்ணல் தியாகி திலீபனின் 5வது நினைவு தினத்தையொட்டி, இன்று 20ம் திகதி பின்வரும் இடங்களில் சிரமதானப் பணிகள் நடைபெறவுள்ளன.

சாம்சன் குடியிருப்பு மக்கள் தாம் குடியிருக்கும் பகுதியையும், சங்கானை மக்கள் மூளாய் செல்வா சனசமூக நிலையத் திருத்த வேலைகளிலும், அளவாய் மேற்கு பூமகள் சனசமூகநிலையத்தினர் பொதுக் கிணறு வீதியைத் துப்புரவாக்கும் வேலையையும். கரவெட்டி மேற்கு செங்கதிர் அறிவாலய உறுப்பினர்கள் முன்னணி வகித்து செங்கதிர் அறிவாலயம் சூரிய கலா பாலர் பாடசாலை முன் உள்ள சிறுவீதியை திருத்தும் வேலையும், பளைப் பிரதேச பொதுமக்கள் அப்பகுதி பொதுக் கிணறுகளை துப்பரவு செய்யும் நடவடிக்கையிலும் சாவகச்சேரி மக்களில் அரைவாசிப்பகுதியினர் மீசாலை பன்றிக்கேணி வீதி திருத்துதல், கல்வயல் நாகதம்பிரான் கோவில்வீதி திருத்துதல் ஆகிய பணிகளிலும் ஈடுபடவுள்ளனர். (க)

# வடமராட்சி வடக்கில் தினமும் உண்ணாவிரதம்

(புலோலி)

தியாக தீபம் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு விழாவை யொட்டி கடற்புலிகளின் வடமராட்சி வடக்கு கோட்டப் பிரிவு கிராமிய கடற்றொழிலாளர் சங்க ஒன்றியம் உட்பட பல்வேறு பொது நிறுவனங்களின் உதவியுடன் 25 ஆம் திகதி வரை அடையாள உண்ணாவிரதங்களை கிராமம் தோறும் நடைபெறவுள்ளது,

இன்று 20 ஆம் திகதி இன்பருட்டியிலும் 22 ஆம் திகதி பொலிகண்டியிலும் 23 ஆம் திகதி ஊறணியிலும் 24 ஆம் திகதி வல்வெட்டித்துறையிலும், 25 ஆம் திகதி தொண்டமானாறிலும் நடைபெறவுள்ளன.

தினமும் காலை 7-00 மணி முதல் 5-00 மணிவரை நடைபெறும் இவ்வுண்ணாவிரத முடிவில் திலீபனின் நினைவஞ்சலிக் கூட்டங்கள் இடம்பெறும். (61)

## கிளிநொச்சியில் உண்ணாவிரதம்

(கிளிநொச்சி)

தியாகி திலீபனின் நினைவு நாள் வைபவங்கள் கிளிநொச்சியில் மிகவும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது

கிளிநொச்சி நகரில் கந்தசாமி கோவில் முன்றலில் பிரமாண்டமான அரங்கம் அமைக்கப்பட்டு உண்ணாவிரதம் மற்றும் பொதுக்கூட்டமும் இடம்பெற்று வருகிறது. நகர் தோறணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. (83)

# வழக்கம்பரையில் உண்ணாவிரதம்

(சித்தன்கேணி)

வழக்கம்பரை அம்மன் ஆலயத்திற்கு முன்னால் தியாகி திலீபனின் ஞாபகார்த்த அடையாள உண்ணாவிரதம் 15ம் திகதியிலிருந்து தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

வலிகாமம் மேற்குப்பிரிவு அரசியல்துறையினரின் ஏற்பாட்டின் பேரில் வலிகாமம் மேற்குப்பிரிவில் உள்ள பெரும்தொகையான மக்கள் பகுதிபகுதியாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். (137)

# நூலகம் முன் உண்ணா விரதம்

(அரியாலை)

யாழ் டேவிட் வீதி திலீபன் நூலகம் முன்பாக கடந்த 17-ந் திகதி நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலை சிறுவர் சிறுமிகள் வயோதிபர்கள் தாய்மார்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோர் காலை 7-00 மணி முதல் மாலை 5-00 மணிவரை அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். (59)

# திக்கிரையான நூலகம் மீண்டும் செயல்படுகிறது

(கிளிநொச்சி)

தரமான நூலகமாக இயங்கி வன்செயல் காரணமாக தீக்கிரையாக்கப்பட்ட பொது நூலகம் மீண்டும் நல்லமுறையில் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இவ்வாறு கரைச்சிப்பிரதேச சபையின் பொது நூலகத்தை கிளிநொச்சி பாலப்பண்ணைக் கட்டிடத்தில் திறந்து வைத்து உரையாற்றுகையில் அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

கரைச்சி பிரதேசசபையின் ஆணையாளரும் உதவி அரச அதிபருமான செல்வி என். இந்துமதி தலைமையில் இத்திறப்பு விழா வைபவம் இடம்பெற்றது.

கிளிநொச்சிப் பிரஜைகள் குழு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. வி. கிருஷ்ணசாமி பேசுகையில்; கடந்த வன்செயலின்போது கிளிநொச்சி நூலகத்தில் இருந்த 10ஆயிரத்திற்கும் அதிகமான நூல்கள் எரிக்கப்பட்டன இன்று திறக்கப்படும் நூலகத்திற்கு பொதுமக்கள் பூரணமான ஆதரவை நல்க முன்வரவேண்டும்.

திரு இ. கிட்ணன், சிவா மாஸ்டர் மற்றும் மாவட்டப் பதிவாளர் திரு. கே. சதாசிவ ஐயர், கிராம சேவையாளர் திரு ஜோன் பப்ரிஸ், கொத்தணி அதிபர் என், சோதிநாதன் உட்பட பலர் உரையாற்றினர்கள். திரு, ஆறுமுகம் நன்றி கூறினர். [83]

## இடம்பெயர்ந்தோர் வீடுகளில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

சில்லாலை சாந்தை கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் வீடுகளிலுள்ள பொருட்கள் திருடப்பட்டுள்ளது.

தங்களின் வீட்டுத் தளபாடங்கள் கோழிகள் என்பன திருட்டுப் போய்விட்டதாகச் சாந்தை கிராமத்தை சேர்ந்த பலர் தெரிவித்தனர். (72)

## சைக்கிள் திருட்டு

(நல்லூர்)

நல்லூர், நாவலர் வீதி, செட்டித்தெருச் சந்தியிலுள்ள வீடொன்றில் பூட்டிவைக்கப்பட்டிருந்த லேடீஸ் சைக்கிள் கடந்த வியாழக்கிழமை இரவு திருடப்பட்டுள்ளது. இத்திருட்டுக் குறித்துத் தமிழீழக் காவல் துறையிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (158)

## மழையினால் அகதிகள் பாதிப்பு

(வட்டுக்கோட்டை)

மானிப்பாய்அந்தோனியார் கோவில், நவாலி மகாவித்தியாலயம் முதலான முகாம்களில் தங்கியிருந்த அகதிகள் நேற்று முன்தினம் பெய்த மழை காரணமாக பெரும் பாதிப்புக்குள்ளானார்கள்.

இந்த முகாம்களில் மரங்களுக்குக் கீழ் தங்கியிருந்தவர்களே பெரும் பாதிப்புக்குள்ளானார்கள்.

இந்த முகாம்களில் கட்டிட வசதி போதாத காரணத்தால் பெருந்தொகையானவர்கள் மரங்களுக்குக்கீழ் தங்கியிருந்து சமைத்துச் சாப்பிட்டதோடு இரவில் நித்திரையும் செய்து வந்தனர். திடீரென மழை பெய்ததால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். [139]

# பாடசாலைகளில் தினமும் மாணவர் உண்ணாவிரதம்

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு பகுதிகள் எங்கும் லெப். கேர்ணல் திலீபனின் ஐந்தாவது நினைவு நாளையொட்டி வீதிகள் வீடுகள், வர்த்தக நிலையங்கள் விடுதலைப் புலிகள் முகாம்கள் பாசறைகள், அலுவலகங்கள், அரச அலுவலகங்கள் எங்கும் மஞ்சள் சிவப்பு நிறங்களினால் அலங்கரிக்கப்பட்டு பதாகைகள் தோரணங்கள் கட்டப்பட்டுள்ளன.

இப்பகுதி மக்கள் விநாயகர் ஆலயத்தில் தினமும் உண்ணாவிரதத்தை அனுஷ்டித்து வருகின்றனர். கிராமம் கிராமமாக இந்த உண்ணாவிரத அனுஷ்டிப்புகள் நடைபெற்று வருகிறது. பாடசாலை மாணவர்கள் மாணவிகள் ஆசிரியர்கள் பலரும் இந்த உண்ணாவிரத நோன்பை குறிப்பிட்ட தினங்களில் ஏற்படுத்தி வருகின்றனர்.

பாடசாலைகள் ஆரம்பிக்கு முன்னர் அரைமணி நேரம் பாடசாலைகளில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. உடுப்பிட்டி கொத்தணி மட்டத்திலான பாடசாலைகள் மூத்தவிநாயகர் ஆலயத்தில் உண்ணாவிரதம் அனுஷ்டிக்கின்றனர்.

உண்ணாவிரதத்தின் போது கவியரங்குகள் வில்லிசைகளும் நடைபெற்று வருவதோடு பிரமுகர்களால் உரைநிகழ்த்தும் வைபவங்களும் இடம்பெற்று வருகின்றன. (150)

## பாதுகாப்பு அதிகரிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

பொலிஸ் மற்றும் கடற்படையினர் இப்பகுதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

# சனசமூக நிலையங்கள் சிரமதானப் பணி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள சனசமூகநிலையங்கள், பாடசாலைகள் ஆகியன ஒன்று சேர்ந்து தியாகி திலீபனின் 5வது நினைவு நாள் நிகழ்ச்சிகளின்போது சிரமதானப் பணிகள், இரத்த தானம், வழங்கல் போன்றவற்றை மேற்கொள்ள ஏற்பாடு செய்து வருகின்றன.

முதற் கட்டமாகக் கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தினர் நேற்று முதல் சிரமதானப் பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

அரியாலை, ஈச்சமோட்டை, கச்சேரி, நல்லூர், மணியம் தோட்டம், பாசையூர், குருநகர், நாவாந்துறை, கொட்டடி, தட்டாதெரு, நாச்சிமார் கோவிலடி, முத்திரைச் சந்தி, நாயன்மார்கட்டு, வண்ணார்பண்ணை. ஒட்டுமடம். கல்வியங்காடு, சுண்டுக்குழி ஆகிய இடங்களிலுள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து இப்பணிகளைச் செய்து வருகின்றன. (56)

## பார்வை குறைந்த மாணவர்களுக்கு கண்ணாடி

(புலோலி)

கண்பார்வை குறைந்த மாணவர்களுக்கு றெட்பானா நிறுவனம் கண்ணாடிகளை வழங்கி வருகிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை றெட்பானா நிறுவனம் பாடசாலை மாணவர் 50 பேருக்கு கண்ணாடிகளை வழங்கியுள்ளது. (61)

# திருவுருவப் படத்திற்கு தினமும் மக்கள் அஞ்சலி

(மானிப்பாய்)

தியாக தீபம் திலீபனின் 5-வது நினைவு தினத்தையொட்டி ஆனைக்கோட்டை வர்த்தகர்கள் ஒன்றிணைந்து ஆனைக்கோட்டை ஊடாக நவாலி செல்லும் வீதி மிக அழகாக அலங்கரிக்கப்பட்டுள்ளது

மேலும் இப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள், பொது இடங்கள் என்பனவற்றிலும் சிவப்பு, மஞ்சள்நிற கொடிகள் பறக்கவிடப்பட்டு வாழை தோரணங்கள் கட்டப்பட்டுள்ளதுடன்பிரதான முக்கியசந்தியொன்றில் பாரிய பந்தல் ஒன்றும் அமைக்கப்பட்டு திலீபனின் உருவப்படம் வைத்து தினமும் மக்களால் அஞ்சலி செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை இப்பந்தலில் திலீபனைப் பற்றிய வீடியோ படக்காட்சிகளும் அவரைப் பற்றிய உரைகளும் தினமும் மாலை 6 மணி முதல் இடம்பெற்று வருகின்றது. [71]

## உலகம் வியந்தது

திலீபனெனும் தீபம் எரிந்தது — அதில்
தமிழீழத் தாயகம் தெரிந்தது
பலிபீடமதில் அவனுடல் சரிந்தது
பசியும் தாகமும் அவனிடம் தோத்தன
காந்தி தேசத்தின் துகில் உரிந்தது — அமைதி
காக்க வந்தவர் ஆசை புரிந்தது
திலீபனெனும் தீபம் அவிந்தது
தியாகம் ஈதென உலகம் வியந்தது

— நீர்வை இரதி

## 850 கட்டடத் தொழிலாளர்களுக்கு நிவாரணம்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தொழிலிழந்த சுமார் 840 சீமெந்து கட்டடத் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு இலவச நிவாரணம் வழங்கப்படுகின்றது. [187]

## மரக்கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

லெப். கேர்ணல் திலீபனின் 5ம் ஆண்டு நிறைவு ஞாபகார்த்தமாக 1,000 மரக்கன்றுகளைப் பொதுமக்களுக்கு வழங்குவதற்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தீர்மானித்துள்ளது.

இந்த மரக்கன்றுகளின் விநியோகம் இன்று 20ம் திகதி காலை 10-00 மணி முதல் ஆரம்பமாகவுள்ளது. மரக்கன்றுகளைப் பெற விரும்புவோர், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தலைமைச் செயலகம், 83/2, காங்கேசன்துறை வீதி, கொக்குவில். என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

வளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய்க்கடி எதிர்ப்புச் சக்தி மருந்து (ஊசி) ஏற்றுதல் நல்லூர்ப் பிரதேச சபையின் திருநெல்வேலி, நல்லூர் வட்டாரங்களில் சம்பந்தப்பட்ட வட்டாரத்தைச் சேர்ந்த சனசமூக நிலையங்களில் வைத்து நாளை 21, 22, 23ம் திகதிகளில் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. (அ)

## ★ பத்திரிகை சுதந்திரம் நசுக்கப்படுகிறது

# தமிழக அரசுக்கு எதிராக

## நாளை மனித சங்கிலிப் போராட்டம்

(சென்னை)

தமிழகத்தில் பத்திரிகை சுதந்திரத்தை தமிழக அரசு மீறிவருவதை கண்டித்து நாளை திங்கட்கிழமை சென்னையில் 'மனித சங்கிலிப் போராட்டம்' நடைபெறவுள்ளது.

தமிழக சட்டப் பேரவையை அவமதித்ததாக கூறி நாளை முரசொலி பத்திரிகை ஆசிரியர் திரு செல்வம் சட்டப் பேரவைக்கு வந்து மன்னிப்பு கோரவேண்டுமென தமிழக சபாநாயகர் திரு சேடப்பட்டி முத்தையா உத்தரவிட்டுள்ளார்.

இதனை வன்மையாகக் கண்டிக்கும் தமிழக அரசு பத்திரிகை சுதந்திரத்தை நசுக்கும் போக்கை கைவிடக் கோரியும் நாளை தமிழகத்தில் மனித சங்கிலிப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை திரு. முரசொலி செல்வம் நாளை சட்டப்பேரவைக்கு மன்னிப்புக் கோரத் தவறுவாரானால் அவர்மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென திரு. சேடப்பட்டி முத்தையா கூறியுள்ளார். (சி-க)

## 'ஒபரேஷன் சதுரங்கம்' ஜெரி சில்வா தலைமை

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் பண்டத்தரிப்பை நோக்கி முன்னேற முயன்ற 'ஒபரேஷன் சதுரங்கம்' இராணுவ நடவடிக்கைக்கு வடபிராந்திய இராணுவ தளபதி ஜெரி டி சில்வா தலைமை வகித்தார்.

இவருக்கு பலாலி முகாம் இராணுவ தளபதி ரேகான் தளுவத்த உதவியாக இருந்தார் என்றும் கூறப்படுகிறது.

இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினவின் பணிப்புரையில் இந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதென கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (சு)

## ★ முன்னேறிவந்து

# வீடுகள்மதில்களைதகர்த்தபின் படையினர்முகாம்திரும்பினர்

(சண்டிலிப்பாய்)

பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய் நோக்கி நேற்று முன்தினம் அதிகாலை இளவாலை-மாதகல் ஊடாக முன்னேறி வந்த இராணுவத்தினர் பல வீடுகள், மதில்கள், வேலிகள் ஆகியவற்றை இடித்துச் சேதமாக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

சண்டிலிப்பாய், மண்டுமண்டான், பிரான்பற்று, சில்லாலை, பண்டத்தரிப்பு, பத்திமா கோயிலடிப் பகுதி ஆகிய இடங்களுக்கே முன்னேறி வந்து பெரும் அட்டகாசங்களைப் புரிந்துவிட்டுத் திரும்பிச் சென்றுள்ளனர்.

கனரக வாகனங்கள் மூலம் பல வீடுகள், மதில்கள் நொருக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டுள்ளன. பனை, தென்னை மரங்களைக் கனரக வாகனங்கள் மூலம் நிலத்தோடு பெயர்த்துச் சேதமாக்கியும் சென்றுள்ளார்கள்.

இப்பகுதிகளிலிருந்துநேற்று முன்தினம் வெளியேறிய மக்கள் தமது இருப்பிடங்களுக்கு நேற்றுச் சென்று தமது உடைமைகள், வீடுகளைப் பார்த்து விட்டுத் திரும்பினர்.

எனினும் மக்கள் நேற்றுத் தத்தமது வதிவிடங்களுக்கு உடனடியாக சென்று பார்த்தபோது அங்கு குடியிருக்கும் நிலையில் அவை இல்லையென பலர் தெரிவித்தனர். (56-சி)

## அகதிகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

மாதகல், மாரீசன்கூடல் ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் கோவிலில் தஞ்சமடைந்துள்ள சுமார் 80 குடும்பங்களுக்கு யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையினர் சமையல் பாத்திரங்கள், உடுதுணிகள், பாய்கள் ஆகியவற்றை வழங்கினர்.

பேரவைத் தலைவர் ஆத்மஜோதி திரு. நா. முத்தையா இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் தமிழ் மக்களைச் சூழ்ந்துள்ள துயரங்கள் தீர இறை வழிபாட்டில் ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டார்.

## குமண வருகிறது

(யாழ்ப்பாணம்)

கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று குணமடைந்த 60 க்கும் மேற்பட்ட நோயாளர், அவர்கள் உதவியாளர்களை ஏற்றிக்கொண்டு திருமலையிலிருந்து புறப்பட்ட 'குமண' கப்பல் இன்று நண்பகல் பருத்தித்துறைதுறை முகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ் போதனா வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களினால் தெரிவுசெய்யப்பட்ட 40 க்கு மேற்பட்ட நோயாளர்களை குமண உடனடியாக ஏற்றிக்கொண்டு திருமலை புறப்பட்டுச் செல்லும். (56)

## படை முகாம்களிலிருந்து பலத்த ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி-மாதகல் பகுதி படை முகாம்களிலிருந்து நேற்று முற்பகல் வேளையில் படையினர் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பண்டத்தரிப்பு சில்லாலை திருவடிநிலைப் பகுதிகளில் இச்ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

இடையிடையே துப்பாக்கிச் சூட்டுசத்தங்களும் கேட்டபடியிருந்தன. (56)

## இணைப்பு விவகாரம்: தெரிவுக்குழுவுக்கு நெருக்கடி

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழு மீண்டும் கூடும்போது வடக்கு கிழக்கு இணைப்பு விவகாரம் பெரும் பிரச்னையாக அமையுமென செய்திகள்கூறுகின்றன.

தெரிவுக்குழு இதுகுறித்து ஆராயும்போது ஐ.தே க.வும் சுதந்திரக்கட்சியும் இணைப்பை எதிர்க்கவுள்ளனவாம்.

இதேவேளை இணைப்பை தமிழ்க்கட்சிகள் அனைத்தும் [இ தொ. கா] உட்பட ஆதரிக்க இருப்பதால் இவ்விவகாரத்தில் தெரிவுக்குழு பெரும் நெருக்கடியை எதிர்நோக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

## ஆஸ்திரேலியா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விடுத்துள்ளார்.

கடந்த வாரம் ஆஸ்திரேலியாவிலுள்ள 'தமிழ்ச் சங்கங்களின்சம்மேளன பிரதிநிதிகள் திரு. கிறீற் ஈவன்ஸை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்: தமிழ் மக்கள் இந்த யுத்தத்தால் சொல்லொணா துன்பம் அடைவதும் அவர்களினதும் கொல்லப்படுவதும் கவலைக்குரியவிடயமென்றும் தீர்வுக்குரிய சூழ்நிலையை அரசு ஏற்படுத்த வேண்டுமெனவும் கூறினார்

இதேவேளை விடுதலைப் புலிகளின் லண்டன் கிளை ஆஸ்திரேலிய அரசுக்கு அனுப்பிய கடிதத்தில்இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக ஆஸ்திரேலிய மத்தியஸ்தத்தை விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## அடுத்த 5 வருடத்தில் 1,250 தொழிலாளரை பி. பி. ஸி. வேலைநீக்கும்

(லண்டன்)

சர்வதேச புகழ்பெற்ற நிறுவனமான பி.பி.சி. நிறுவனம் அடுத்த ஐந்து வருடங்களில் 1,250 தொழிலாளரை வேலையிலிருந்து நீக்க முடிவுசெய்துள்ளது.

பொறியியலாளர்கள், உணவு ஏற்பாடுசெய்வோர் ஆகியோரே வேலைநீக்கம் செய்யப்படவுள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவித்துள்ளன.

மேற்படி நடவடிக்கை மூலம் சுமார் 15 லட்சம் ஸ்ரேலிங் பவுண் மீதப்படுத்தப்படும் எனவும் 17 வானொலிக் கலையகங்கள் மூடப்படவுள்ளதாகவும், வெளியே சென்று ஒலிப்பதிவு செய்யும் 20 வாகனங்கள் வாபஸ்பெறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## தியாகி திலீபன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ச்சி பூர்வமாக நினைவுகூரப்பட்டது.

தீவகப்பகுதி மக்களும், மாணவர்களும் கலந்துகொள்ளும் அடையாள உண்ணாவிரதம் நேற்று 5 வது நாளாக தொடர்ந்து இடம்பெற்றது.

நல்லூரில் இடம்பெற்ற இந்த உண்ணாவிரதத்தில் அப்பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

யாழ் ஐயனார் கோவிலடியில் இடம்பெற்ற உண்ணாவிரதத்தில் வடபிராந்திய வர்த்தக ஊழியர்களுடன் அப்பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.

வலிகாமம்பகுதியில் 4 இடங்களிலும், வடமராட்சிப்பகுதியில் 2 இடங்களிலும், தென்மராட்சியில் 4 இடங்களிலும் நேற்று அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றன.

மணலாறு மற்றும் வன்னிப் பிராந்தியங்களிலும், மன்னாரிலும் தியாகி திலீபனின் நினைவு நிகழ்ச்சிகள் நேற்று தொடர்ந்து நடைபெற்றன.

அடையாள உண்ணாவிரதம், பொதுப்பணி, கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் பெருந்திரளான மக்கள் பங்குபற்றினர்.

# வன்னி எல்லையில் புதிய முகாம்கள்

(வவுனியா)

வவுனியா எல்லைப்புற சிங்களக் கிராமங்களைப் பாதுகாப்பதற்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் புதிய முகாம்களைத் திறப்பதில் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர் எனத் தெரியவருகிறது

வவுனியா எல்லைப்புற கிராமங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின அடாவடித்தனங்களாலும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையினாலும் ஏற்கனவே அங்கிருந்த தமிழ் மக்கள் தங்கள் உடமைகளைக் கைவிட்டு வெளியேறிவிட்டனர்.

தற்போது ஸ்ரீலங்கா அரச படைகளும் வவுனியா எல்லைப் புறங்களில் அவசரம் அவசரமாக சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்திவருகின்றன. (சு)

## ஹெலி நோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கடலோரப் பகுதியினை நேற்றுக் காலை 7 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று வட்டமிட்டு அப்பகுதிமக்களை அச்சுறுத்தியது.

பலதடவை வட்டமிட்ட ஹெலிகொப்டர் 15 நிமிடம் வரையில் வட்டமிட்டு நோட்டம் பார்த்தது. (56)

## யாழ் குடாவில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்தக் குறிக்கோளை மையமாக வைத்தே வலிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத் தாககுதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதல் போன்று குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் பிரதேச விஸ்தரிப்புத் தாக்குதல் நடத்தப்படும் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ரி)

## யுத்தநிறுத்தம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாறு விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் கேட்டுக்கொள்ளப்படுவார். அவர் கலந்து கொள்ளமுடியாத பட்சத்தில் அவரது சார்பில் கலந்து கொள்ளும் பிரதிநிதியை அவர் தெரிவிக்க வேண்டுமெனவும் கேட்கப்படுவர்.

இதற்கு அரசும் - புலிகளும் இணங்கும் பட்சத்தில் அடுத்த கட்ட நடவடிக்கையை ஆரம்பித்தல் என்பனவாகும், (சி

## தென்மராட்சியில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம மேற்கிலிருந்து நேற்று முன்தினம இராணுவ நடவடிக்கையினால் வெளியேறிய மக்களில் பலர் தென்மராட்சிப் பகுதியை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

சண்டிலிப்பாய், நவாலி, மானிப்பாய், வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய பகுதிகளிலில் பெரும் இடநெருக்கடியால்வலி. வடக்குப் பகுதியில் உள்ளபெருமளவு மக்கள் தென்மராட்சியல் தஞ்சம் புகுந்துள்ளனர்.

நேற்று முன்தினம் வெளியேறியமக்களில் பலர் தென்மராட்சிப் பகுதிகளான கைதடி, நுணாவில், மடுவில், மிருசுவில், கொடிகாமம் ஆகிய பகுதிகளை நோக்கிசென்றனர் (66)

## தமிழகத்திற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டவர்களில் திரு. நெடுமாறனும் ஏனைய தலைவர்களும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (கே-சி)

## பத்து ஜே.வி.பி.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பிடிக்கப்பட்டது.

சுமார் 2000 ஜே. வி. பியினர் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த முகாம் பலத்த பாதுகாப்பின் மத்தியிலிருந்தது. எனினும் இச்சம்பவம் குறித்து பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காவலர்களின் உதவிகூட இவர்கள் தப்பிச் செல்ல உதவியாயிருந்திருக்கலாம் என்பது குறித்தும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-சி)

## பாட்டாளி

1 ம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சியின் மாநாட்டில் பிரிவினைக்கு ஆதரவாகவும விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறித்து செய்தியாளர் பல கேள்விகள் கேட்டனர்.

தடைசெய்யப்பட்ட அமைப்புக்கு ஆதரவு அளிப்பவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (கே)

## காமினி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னால் விடுக்கப்பட்டிருந்தது.

சிறிலங்கா கட்சியின் மத்திய கமிட்டி இக்கோரிக்கை தொடர்பாக அண்மையில் ஆராய்ந்தது.

இறுதியில் இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. (கே)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் [illegible] 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under licence Number B/19336/